# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 14,509 — 1965 සැප්තැම්බර් 18 වැනි සෙනසුරාදා — 1965.9.18**

14,509 ம் இலக்கம் — 1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## மகா தேசாதிபதியின் பிரகடனங்கள்

ம. தே. கா. இல. என். 107/65.

**இலங்கைத் தீவினதும் அதனைச் சார்ந்த நாடுகளினதும் மகாதேசாதிபதியும், முதற் பெரும் படைத்தலைவரும், பிரித்தானிய ஏகாதிபத்திய அதி உத்தம வரிசை உறுப்பினரும் ஆகிய அதி உத்தமராம் விலியம் கொபல்லவ அவர்களினுல்**

(முத்திரை)

**டபிள்யூ. கொபல்லவ.**

**திரு.** அப்துர் றஹமன் செய்யத் அஹமத் அவர்களுக்கு.

வாழ்த்துக்கள் :

1965, ஜூலை முப்பத்து ஒன்றும் நாள் தேதியிடப்பட்டதும் 14,468 ம் இலக்க அதி விசேட கசெற்றில் பிரசுரிககப்பட்டதுமான 1965, ஜூலை 31 ந் தேதிய இத்தீவின் பொது இலச்சினையின் கீழான ஒரு எழுத்தாணை மூலம் இலங்கையில் ஒலிபரப்பு, தகவல் சேவைகளின் நிலைமைபற்றியும், ஒலிபரப்பு, தகவல் பகுதியின் நிர்வாகம், அமைப்பு, செயல்முறைகள் என்பன பற்றியும் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும் ;

மேற்சொல்லப்பட்ட ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்த திரு. ஹமீது ஹுசெயின் ஷேய்க் இஸ்மெயில், எம்.பி.ஈ., அவர்கள் அந்த ஆணைக்குழுவிலிருந்து விலகிவிட்டாராதலாலும் :

மேற்சொல்லப்பட்ட உறுப்பினரின் இடத்தில் வேறெரு உறுப்பினரை நியமித்தல் அவசியமாகி விட்டதாதலாலும் :

மகாதேசாதிபதி விலியம் கொபல்லவ ஆகிய நான் இப்பொழுது (393 ம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 2, 3, 5 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகளைப்பின்பற்றி இவற்றின் மூலம், மேற்சொல்லப்பட்ட திரு. அப்துர் றஹமன் செய்யத் அஹமத் ஆகிய உங்களை மேற்சொல்லப்பட்ட ஆணைக்குழுவின் உறுப்பினராக இருக்க நியமிப்பதன் மூலம் மேற்சொல்லப்பட்ட எழுத்தாணையை மாற்றி அமைக்கிறேன.

கொழும்பில் வைத்து ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தைந்தாம் ஆண்டு செத்தெம்பர் மாதம் பதினுரும் நாள் அன்று இத்தீவின் இலச்சினையின் கீழ் வழங்கப்பட்டது.

அதி உத்தமரின் கட்டளைப்படி,

நி. விஜேவர்தன,
மகாதேசாதிபதியின் செயலாளர்.

9—940


இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெறறது.